போர்வாள்

ள் : காஞ்சி. மணிமொழியார்
ளஞ்செழியன், B. A. (Hons.)

திராவிடர் வார வெளியீடு.

தனி இதழ் அணா 1½
ஆண்டுத் தொகை ரூ. 5

சென்னை 20—9—47 சனிக்கிழமை | வீச்சு 6

—லூரில் படைவீடு:

வீரர்களின் அணிவகுப்பு!

—:o:—

ிரண்டனர் திராவிடர்—இட்டனர் இடிமுழக்கம்.

திரு. வி. க. போர் முரசு—பெரியார் பேருரை

பிரிவினை மாநாட்டு நிகழ்ச்சி முறை.

-9-47 ஞாயிறன்று கட ல் திராவிடநாடு பிரிவினை ாடு! மாநாடா அது? அல்ல! ாவிட இளங்காளைகளின் ி வகுப்பு; வரவிருக்கும் பிரி ப் போராட்டத்திற்கான ிகை ; ஆயிரமாயிரம் வீரர் ஒன்று திரண்டு அணி த்து அடைந்தே தீருவோம் விட நாட்டை என்று ுரைத்த சம்பவம்.

ன்று கடலூர் கடலூராக ல—திராவிடர் பாசறையாக ்தது. நாட்டின் நாலு பக் கங்களிலிருந்தும் திராவிடர்கள் கூட்டங் கூட்டமாக வந்திருந் தனர். வருகிற ஒவ்வொரு இரயி லிலிருந்தும் அணி அணியாக இறங்கிய வண்ண மிருந்தனர் திராவிடத் திரு நாட்டு வீரர் களும் வீராங்கனைகளும். மணிக்கு மணி கடலூரில் கூடி இருந்த மக்கட் கடல் பெரு கிற்று. மாநாடு துவங்கு முன்பு ஒவ்வொரு வட்டாரத்தி லிருந்தும் ஒவ்வொரு ஊரிலிருந் தும் இன உணர்ச்சியால் உந்தப் பட்டு ஓடோடி வந்திருந்த தோழர்களும் தோழியரும் முகத்தில் வீரம் ததும்ப உள்ளத் தில் சிந்தனை அலைகள் எழும்ப, வளமார் எமது திராவிட நாடு வாழ்க வாழ்கவே என்று பண் பாடிய வண்ணம் கடலூர் தெருக்களில் உலவிய காட்சி கண் கொள்ளாக் காட்சியாய் இருந்தது.

"வடநாட்டு வமபர்கள் நம்மை அலட்சியம் செய்தனரா, கிடக்கட்டும் அவர்கள். வீரம் உண்டு நம் உள்ளத்தில்; திரா விடப் பண்பு உண்டு நம் செ

ார் } 4—10—47 இதழே மலராக வெளிவரும் {

குருதியில்; யாருக்கும் அஞ்சாத நெஞ்ச வீறு உண்டு நம் தலைவர் ஈ. வெ. ரா. விடம்; பிறகு அச்சமேன் நமக்கு, வெற்றியைப் பற்றிய ஐயமேன், நாம் போகும் பாதையைப் பற்றிய சந்தேகப் பார்வை ஏன், டில்லி ஏகாதிபத்தியம் திராவிடத்தை எத்தனை நாளைக்கு இனியும் அடக்கி வைத்திருக்க முடியும்'' என்று ஒருவருக் கொருவர் பேசிக் கொண்டும், வளர்ந்து வரும் படேலிசம் திராவிடத்தை வதைத்துக் கொண்டிருப்பதை யாம் பொறுக்க மாட்டோம் மாட்டோம் என்று வீர உரை வீசிக் கொண்டும், உன்னுடைய கறுப்புச் சட்டையில் ஏனப்பா கொஞ்சம் மங்கல், உள்ளத்தில் ஏதேனும் அச்சம் நடமாடுகிறதா என்று ஒருவர் கேட்க, "அடடே ஒன்றுமில்லையப்பா திராவிட வீரத்தின் முன் நேர் நிற்க மாட்டாமல் ஆரிய அட்டகாசம் மங்கத் தொடங்கிவிட்டது, அவர்கள் வட்டாரத்தில் ஒளி குறைந்து விட்டது, அவர்கள் மகிழ்ச்சி மறைய ஆரம்பித்துவிட்டது-அதைக் காட்டத்தானப்பா கறுப்பில் கொஞ்சம் மங்தம்'' என்று மற்றவர் சொல்ல சூழ இருந்தவர்கள் தங்கள் கறுப்புச் சட்டையின் நிறத்தை நிதானித்துப் பார்த்துக் கொண்டும், நீங்கள் எந்த ஊர், உங்களூர் திராவிடர் கழகம் எப்படி வேலை செய்கிறது, எங்களூர் கழகம் மகத்தான வேலைகளைச் சாதித்திருக்கிறதே என்று "தற் பெருமை'' பேசிக் கொண்டும் சிறைச் சாலை அன் பழைப்புத் தர இருக்கிறதே திராவிடர்க்கு, உமக்குத் தெரியுமா, நீர் தயார்தானா என்று உரையாடிக் கொண்டும், ஓமந்தூரார் உள்ளத்திலும் இன உணர்ச்சி ஆழப் பதிந்து விட்டதாமே, எத்தகைய சூறாவளிக் காற்றும் அந்த உணர்ச்சியைப் பெயர்த் தெடுக்க முடியாதாமே, என்று சிலர் சொல்ல, சிலர் "அதை நம்பாதே தம்பீ! காமராஜர் கூடத்தான் "திருப்பரங் குன்றம்'' நடத்தினார்—பட்டாளம் திரட்டினார்-ஊழியர்களின் முன்னணி அமைத்தார்—திக் கெட்டும் வீர முழக்கம் செய்தார்—கடைசியில் பணிந்து போனார்'' என்று பதில் சொல்லிக் கொண்டும், மக்கள் அங்குமிங்கும் உலவிக் கொண்டிருந்தனர். எல்லோருடைய உரையாடலிலும் 'திராவிட இன உணர்ச்சியைப் பற்றிய பேச்சே செறிந்து கிடந்தது.

காலை 9 மணிக்கு, ஊர்வலம், இரயிலடியிலிருந்து புறப்பட்டது. அடே அப்பா! எத்தனை பெரிய ஊர்வலம்! எவ்வளவு அழகிய காட்சி! மாபெரும் ஊர்வலம் மாபெரும் ஊர்வலம் என்று பெருமையாகச் சொல்கிறார்களே சம்பிரதாயத்திற்கு, அந்தச் சொற்றொடரின் உண்மைப் பொருளை உள்ளவாறு உணர்ந்து விட்டனர் கடலூர் ஊர்வலத்தைக் கண்டபோர்கள் அனைவரும். மாபெரும் ஊர்வலம் என்றால் மா பெரும் ஊர்வலமே அது. 3000 பேருக்குக் குறையாத கருஞ் சட்டை வீரர்கள் கையில் கொடியேந்தி வரிசை வரிசையாகச் செல்ல, 20 000 பேர்—பாட்டாளிகளின் பட்டாளம்—உடன் செல்ல, வட்டாரந்தோறுமிருந்து வந்திருந்த படைத் தளபதிகளும் முன்னணி வீரர்களும் சொல்லின் செல்வர்களும் திராவிட எழுத்தாளர்களும் திரள் திரளாய்ச் செல்ல, புறநானூற்று வீரத் தாய்மாரென வந்திருந்த திராவிட அன்னைமார் ஒரு பக்கம் செல்ல, "பெற்றால் திராவிட நாடுஇல்லையேல் இடுகாடு'', "திராவிடத் தனியரசே நமது இலட்சியம்'', "சிந்தனைச் சிற்பி பெரியார் வாழ்க'' "ஆரியர் சூழ்ச்சியைப் பொடி பொடியாக்குவோம்'' இன் பிற முழக்கங்கள் ஓங்கி எ 'கோச்' ஒன்றில் திராவி தந்தை பெரியார் இராமசா அமர்ந்து வர பிற தலைவர்க சொற்பொழிவாளர்களும் 'க களில் வர, ஊர்வலம் மெள் மெள்ள நகர்ந்தது. நகர் நகர்ந்து சென்றது.

10-½ மணிக்கு மாநாட் பந்தலை ஊர்வலம் அடைந்த அங்கோ கூட்டம் பந்தல் மு தும் நிரம்பி வழிந்திருந்த ஊர்வலத் தோழர்கட்கு இ மில்லை. பந்தலைச் சூழநின்ற அன்னார். பந்தலுக்குள் பெ யார் நுழைந்ததும் கடலோ யெனக் கைவொலி எழுந்த வாழ்க திராவிடம்-வாழ்க அத தந்தை என்று வானைப் பிள உடன் எழுந்தது வல்லோ

முதலில் தோழியர் இ ராணி பாலசுப்பிரமணியம் க புச் சூழ்நிலையில் சிகப்பு வட்ட அமைந்த நம் கருஞ்சிகப் கொடியை ஏற்றிவைத்து, கொ விளக்கம் ஆற்றினார்.

"நாம் திராவிடஸ்தான் வேண்டும் என்கிறோம். நம் நாட்டை நாமே ஆள வேண்டுமென்கிறோம். வட நாட்டு ஆதிக்கத்திலிருந்து எல்லாத் துறைகளிலும் விடுபட வேண்டுமென்கிறோம். இதை ஆரியரும் வடநாட்டவரும் ஏன் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டும்? அப்படித் தவறாக எடுத்துக் கொண்டது மல்லாமல் திராவிடஸ்தான் கேட்பவர்கள் மீதும் அதற்கு வேண்டிய முயற்சியெடுத்துக் கொள்பவர்கள் மீதும் அரசியலாரையும் காலிகளையும் அவர்கள் ஏன் தூண்டிவிட வேண்

(11-ம் பக்கம் பார்க்க)

சிந்தனைச் சிற்பியின் படத் திறப்பு!

—(o)—

கலியாணசுந்தரனர் கருத்துரை.

கடலூர் மாநாட்டில் பெரியார் படத்தைத் திறந்து வைத்து திரு. வி. க. பேசியது:

யான் இம் மாநாட்டுப் பந்தருக்குள்ளே நுழைந்தபோது திரு பால சுப்பிரமணியம் அவர்களும், தலைவர் அவர்களும் மிகமகிழ்ச்சியோடு சில சொற்கள் கூறினர்கள். என்னைப்பற்றி மட்டுமன்றி என் பழம் பெரும் அன்பரும், கெழுதகை நண்பருமாகிய நாயக்கரைப்பற்றியும் சேர்த்துக் கூறியது கேட்டுக் களிபேருவகை எய்துகின்றேன்.

படத்திறப்பை நண்பருக்கும் வழங்கலாம். நொதுமலருக்கும் வழங்கலாம். பகைவருக்குங்கூட வழங்கலாம். நான் நண்பர் என்ற முறையில் நாயக்கர் படத்திறப்பு ஆற்றுகிறேன்.

யானும் நாயக்கரும் முதலில்நண்பராகவும், பிறகு பிரிந்தும், இதோ இன்று ஒருவாறு சேர்ந்தும் பணி மாற்றுகிறோம். ஆனல் எங்கள் நட்பு முறைக்கு என்றும் ஊறு நிகழ்ந்தது கிடையாது. நான் முதன் முதல் பெரியாரை எந்த நிலையில் கண்டேன். 1919-ல் சென்னை யாகாண சங்கத்தில் நான் செயலாளர். அவர் துணைத் தலைவர். அதன் ஆண்டுவிழா ஈரோட்டில் நடந்தது. நானும் சிதம்பரம்பிள்ளையும் பெரியார் வீட்டில் தங்கினேம். அங்கு நான் முதன் முதல் பார்த்தேன். அப்போது அவர் ஜமீன்தாராகக் காட்சிதந்தார். சரிகைநிறைந்த மஞ்சள் தலைப்பாகை, நீண்ட சட்டை அகன்ற மீசைபெரியபூர்ஷ்வாவாக விளங்கும் இவர் வீட்டுக்கு ஏன் வந்தேன் என்று எண்ணினேன். மூன்றுநாள் அங்குத் தங்கும்படி நேர்ந்தது அதற்குள் அவர் எளிய உள்ளத்தைஉணர்ந்தேன். கோலந்தான் பூஷ்வாபோன்றது மனம் மிக எளிமை தவழ்ந்தது. சோஷலிஸ மனப்பான்மை அவரிடம் நிறைந்திருந்தது. இவர் மனைவி பொன் காய்த்த மரமாக இருந்தார். ஆனல் எளிய உள்ளம். கிராமங்கள் நாட்டுப்புறங்கள், வண்டியில்லா இடங்கள் கட்டை வண்டியில் சென்று காங்கிரஸை வளர்த்தோம். வெந்நீர்விட்டு வீழ்த்தினேமில்லை, கண்ணீர் விட்டு வளர்த்தோம். பால சுப்பிரமணியம் சொன்னபடி எவருக்கும் அடிமையாக இருந்து கடனாற்றவில்லை. தொண்டு உள்ளங்கொண்டுஉழைத்தோம். எதற்காக-ஜஸ்டிஸ் கட்சியைக்கொல்லுதற்கு-அடியோடு அழிப்பதற்குத்தொண்டு செய்தோம். இல்லையேல் சிதம்பரனர் விதைத்த தேசிய விதை பட்டுப் போயிருக்கும். அதை வளர்த்ததில் எனக்குப் பங்கு கொஞ்சமிருந்தால் ஈ. வே. ரா. அவர்கட்கு அதிகம், அதிகம், அதிகம் உண்டு. 20 நாட்கள்-மூலை முடுக்குகளில் காங்கிரஸ் பெயர் கேட்டால் பயந்து கதவை மூடிக்கொண்ட அந்தக் காலத்தில் ஓயாது கட்டைவண்டியில் திருநெல்வேலி முற்றும் தொண்டு செய்தோம். பெரியார்செல்வக் குடும்பத்தில் பிறந்தும் எளிய வாழ்க்கையில் இருந்தார். ஏழை உள்ளத்தோடு தொண்டுசெய்தார். நாங்கள் இரட்டை மாட்டுவண்டியில் சென்ற நாட்கள் பல. அவர் என்னைப் பக்கத்தில் இருத்தி தான் வண்டிஓட்டுவார். வசதிகள் எல்லாவற்றையும் பிறர்க்குச் செய்துவிட்டுத் துன்பங்களை அவரே ஏற்றுக்கொள்வார்.

திரு. வி. க. காணும் படேலிசம்

ஈ. வெ. ரா. — அஞ்சுதல் அறியா அடலேறு

அவருடைய கல்வி கேள்வி ஆராய்ச்சிகளைப்பற்றி சொல்லவே வேண்டியதில்லை. அவர் கல்லூரி சென்று கலைப்பட்டம் பெற்றாரில்லை. ஆனால் அவர் ஒரு பெரிய கலைஞர் கலைஞர் கலைஞர் என்று சொல்லுகிறேன். இயற்கை அறிவு (Instinct) அவருக்கு ஆழ்ந்த புலமையைத் தந்திருக்கிறது இயற்கை அறிவைக் கொண்டு பெரிய பெரிய காரியங்களையெல்லாம் சாதித்திருக்கிறார். அவருடைய பண்புகள் பல உண்டு. அந்தப் பண்புகளை — குணங்களை — திறமையை அறிய வேண்டுமானால் அவர் உள்ள நுட்பங்களை அறிய வேண்டும். அதற்குச் சில கூறுபாடுகள் உண்டு. மனோ தத்துவக் (Psychclogy) கூற்றுப்படி கண் ஒரு கருவி. மூக்கு ஒரு கருவி. கண்ணைப் பார்ப்போமேயானால் மூக்கைப் பார்ப்போமேயானால் அது உள்ளத்தின் இயல்புகளையெல்லாம் தெரிவித்துவிடும். பெரியாரின் படத்தைப் பார்க்கும்போது அவர் உள்ளம் எத்தகையது என்று நன்கு தெரிந்துவிடும். படங்கள் ஏன் வைக்கப்படுகின்றன. பார்ப்பவர்கள் உணர்ச்சி கொள்வதற்காகவே ஆங்காங்கு தொங்க விடப்படுகின்றன. பெரியாரின் பண்புகள் இரண்டொன்றை இடத்திற்கேற்ப இச் சந்தர்ப்பத்திற்கேற்பக் கூறுகிறேன்.

அஞ்சாமை ஒவ்வொருவரும் பெற்றிருக்க வேண்டிய சிறந்த பண்புகளில் ஒன்று. ஆவேசம் எழப்பேசுவது மட்டும் போதாது. பெரியார் அஞ்சாமையை எப்படி ஆண்டிருக்கிறார் என்று பார்ப்போம். மூன்று சந்தர்ப்பங்களைக் கூறுகிறேன்.

1924-ல் பெரியார்மீது 124 ஏ பிரிவுப் படி ஒரு பெரிய வழக்கு தொடுக்கப்பட்டது. அவரைக் கோர்ட்டில் நிறுத்தவே என் போன்றார்க்கு மிகுந்த அச்சம் ஏற்பட்டது. ஏழு ஆண்டுகள் தண்டித்து வெளியில் அனுப்பிவிடுவார்களே என்ற அச்சம். அன்று இரவு பாலசுப்பிரமணிய பக்த ஜனசபையில் இருவரும் படுத்தோம். அவர் வெளித் தாழ்வாரத்தில் படுத்தார். இரவு 2-மணிக்குப் பெருமழை பெய்தது. அவரை எழுப்பினேன். எழும்பவில்லை. மழை பெய்தது தெரியுமா என்று காலையில் கேட்டேன். தெரியாது எனக்கூறினார். இது எதைக்காட்டுகிறது. சட்டத்திற்கு அஞ்சாமல் உள்ள அமைதியோடு உறங்கினார் என்பதை விளக்க வேறு என்னவேண்டும்.

இன்னொன்று. பெரியார் அவர்கள் காங்கிரஸில் எப்போது பெருந்தொண்டு ஆற்றினார் என்றால் ஒத்துழையாமை காலத்தில். தன்னை மறந்து அப்போது வேலைசெய்தார். சுயராஜ்யக் கட்சி ஒன்று முளைத்ததும் அவர் மனம் கெட்டுவிட்டது. ஒத்துழையாமை இயக்கத்தை அடக்கவே சுய நலக்காரர்களால் சுயராஜ்யக் கட்சி தோன்றியதாக அவர் கடற்கரையில் வன்மையாகக் கண்டித்தார். இது பழம்பாடம்.

புதுப்பாடம் ஒன்று சொல்லுகிறேன். ஆகஸ்டு பதினைந்து இந்தியா முழுதும் கொண்டாடப்பட்டது. என்ன கொண்டாடப்பட்டது. சுதந்தரம், விடுதலை, முழு விடுதலை (Complete Independence) நாள் கொண்டாடப்பட்டது. சென்னைமுழுதும் பார்த்தேன் எங்கும் கொண்டாட்டம். மூவர்ணக்கொடி எல்லா இடங்களிலும், பறக்கவிடப்பட்டது. நானே சிந்தாதிரிப்பேட்டையில் நடந்த சுதந்தர விழாவில் கொடியேற்றினேன். மூவர்ணக்கொடி,இடையே சக்கரந் தாங்கிய அரசினர் கொடியாகமாறி எங்கும் பறக்கவிடப் பட்டபோது இராமசாமியார் என்ன செய்தார். எத்தனை கோடிபேர் கொண்டாடினாலும் என் மனச்சாட்சிப்படி இந்தியாவுக்கு முழு விடுதலை வரவில்லை. நான் எப்படிக் கொண்டாடுவேன் என்று கூறி திராவிடர் கழகத்தார் கொண்டாடவேண்டாமெனக் கட்டளையிட்டார். இதுதான் அஞ்சாமை. அவருடைய அஞ்சாமை பற்றி நேரே சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் நேரமில்லை. அஞ்சாமையில் எழுவது உரிமை வேட்கையும் உண்மை உணர்வும். அஞ்சாமை உள்ள இடத்தில் உண்மை இருக்கும் அஞ்சாமை இல்லாத இடத்தில் உண்மை இராது. பெரியார் எப்போதும் உள்ளது உள்ளபடியே சொல்வார். இவர் என்ன இப்படிப்பேசுகிறாரே என்று நாங்கள் சொல்வதுண்டு. ஒருமுறை திருச்செந்தூர் சென்றோம். சுயராஜ்யக் கூட்டம் நடந்தது. எங்களை அழைத்துச் சென்றவர் நீலகண்ட சாஸ்திரியார். முதலில் கோயிலைச் சென்று பார்த்தோம். கோயில் சேஷ்டைகளை எல்லாம் பெரியார் பார்த்தார். முதலில் அவரையே பேசும்படிச் செய்தோம். பேசத் தொடங்கியதும் உலகத்திலேயே பாபம் செய்த நாடு இந்தியா; அதிலும் பாபம் மிக்கது தமிழ்நாடு: அதிலும் பாபம் மிக்கது திருச்செந்தூர் என்று சொன்னார். எல்லோரும் திடுக்கிட்டோம். அதோடுவிடவில்லை. திரு வி.க. சைவர் ஆனாலும் அவரும் நானும் நேற்றிரவு ஒரு சாயபுவீட்டில் சாப்பிட்டோம் என்றார் நாயக்கர். அதுகேட்டதும் ஆதிநாராயண செட்டியார் அலறி ஓடினார். மகாதேவ அய்யர் — கூட்டத் தலைவர் போனஇடமே தெரியவில்லை.

நான் பேச எழுந்தேன். பக்குவமாகத் தொடங்கினேன். மலையின் காட்சி—கடல் காட்சி—மணல் காட்சி என்று துவக்கினேன். காங்கிரஸ் அலைகடல் போன்றது என்றேன். 30 ஆண்டுகளுக்கு முன் வந்திருந்தால் என் மனம் திரும்பும் இடமெல்லாம் சுப்பிரமணியராகவே கண்டிருக்கும் என்றேன். நாங்கள் அஹிம்சா தர்மத்தைக் கடைப்பிடிக்கிறோம். ஆகவே சாயபு வீட்டில சாப்பிட்டால் நாங்கள் இருக்கிறவரையிலாவது அஹிம்சா தர்மம் கடைப்பிடிப்பார்கள் எனக்கூறித் தப்பினேன். திருச்செந்தூர் சைவநாடு என்பதைப் பாராமல் உள்ளதை உள்ளவாறே சொல்லிவிட்டார் நாயக்கர். அஞ்சாமையும் உரிமையும் இருக்கும் இடத்தில் ஒரு பெரிய குணம் இருக்கவேண்டும். அது என்ன குணம். கருத்து வேற்றுமைக்கு இடந்தரும் பண்பு. இது பெரியாரிடம் நிரம்பியிருக்கிறது. நாங்கள் இருவரும் காங்கிரஸில் ஒன்றாக உழைத்தோம். பின்ட

தீண்டாமையை ஒழித்த தீரர் பெரியார்

கருத்து வேற்றுமை கொண்டு பிரிந்தோம். நானும் தாராளமாக எட்டு ஆண்டுகள் அவருடன் சண்டை போட்டேன். அவரும் சண்டைபோட்டார். ஆனால் எப்போதும் ஈரோடு போவேன். அவரும் என் வீட்டுக்குவருவார். நட்புரிமை பாராட்டி வந்தோம். நாகம்மை படத்திறப்பு விழா நடந்தது. நான் சென்று படந் திறந்தேன். கோவை முழுதும் திரண்டு வந்தது, என்ன இருவரும் ஒரே மேடையிலா என்று பார்ப்பதற்கு.

மற்றொருமுறை கம்பர் கழக விழா நடந்தது. ரெவரண்டு பாப்ளி தலைவராகப் போடப்பட்டிருந்தது. அவர்வரவில்லை. ராமசாமி நாயக்கரைப் போடும்படி நான் சொன்னேன். நான் கம்பன் பேச்சு என்பது பற்றிப் பேசினேன். நாயக்கர் என்னைத் தலைகீழாகக் கட்டிப் போட்டார். ரயிலில் புறப்பட்டேன். தொண்டர்கள் பலர் இருந்தும் அவரே ஓடி ஓடி ரயிலில் எனக்கு நல்ல இடம் கண்டு பிடித்தார். ஏன் கண்டு பிடித்தார்? கருத்து வேற்றுமை இருப்பினும் நட்புரிமை பாராட்டினார். இதற்கு இன்னொரு எடுத்துக் காட்டு வேண்டுமானால் தருகிறேன். பார்ப்பனர் முதல் எல்லோரும் சமபந்தியாக இருந்து சாப்பிடவேண்டுமென காங்கிரசிலிருந்தபோதே அவர் வலியுறுத்திக் கூறுவது வழக்கம். ஆனால் அதற்காக எவரையும் அவர் வற்புறுத்த மாட்டார். சமபந்தியில் சாப்பிட விரும்பாதவர் எவரேனும் இருந்தால் பணம் கொடுத்தனுப்பி வெளியில் சாப்பிட்டு வரச் சொல்வார். அவர் எப்போதும் கருத்து வேற்றுமைக்கு இடம் தருவார். அது தான் அவரிடம் நாம் கற்க வேண்டிய பாடம். தமிழ்நாட்டில் கருத்து வேற்றுமைக்கு இடம் தருவோர் ஒருவர் உண்டு எனில் அது இராமசாமியாரே என்று என் வாழ்க்கை சொல்கிறது.

தீண்டாதார்க்குக் கோயில் நுழைவுரிமை ஏற்படுதற்காக அவர் பட்ட பாட்டை என்னென்பேன். பல நிகழ்ச்சிகள் என் நெஞ்சில் உறுகின்றன. இரண்டொன்றை இங்கு கிளத்துதல் சாலும். நாங்கள் இருவரும் காங்கிரசில் உழைத்த காலத்தில் திருப்பூரில் ஒரு பெரிய மாநாடு நடைபெற்றது. கோயிலில் எல்லோரையும் விட வேண்டுமென்று தீர்மானம் ஒன்று பெரியாரால் அம் மாநாட்டில் கொண்டு வரப்பட்டது. தீர்மானத்தை நான் தான் எழுதி, பெரியாரைக் கொண்டுவரச் சொன்னேன். நியாயமாகத் தீர்மானத்தையே நான்தான் கொண்டுவந்திருக்க வேண்டும். ஆனால் நான் ஒரு சூழ்ச்சியை அக்காலத்தில் கையாண்டு வந்தேன். அது நாயக்கர்க்குத் தெரியாது. ஏதேனும் ஒரு தீர்மானத்தைப் பற்றி மக்கள் என்ன நினைப்பார்களோ என்ற பயம் எனக்கிருந்தால் முதல் பலியாக ஈ. வெ. ரா. வைப் பேசவிடுவது என் வழக்கம். இராசகோபாலாச்சாரியார் எங்கள் இருவருக்கும் நண்பர். அவர் என்னைமட்டும் தனியே அழைத்துச்சென்று நீங்கள் இதில் தலையிடவேண்டாம் என்று சொன்னார். சேலம் விஜயராகவாச்சாரியார் இத்தீர்மானம் ஜஸ்டிஸ் கட்சியைவிடக் கொடுமையானது என்றார். மதுரை வைத்தியநாதய்யர் ஆதித்திராவிடர் கோயிலுக்குள் நுழைவதை நான் எதிர்த்தே தீருவேன் என்று கொக்கரித்தார். டாக்டர் வரதராசலு நாயுடு, "கோயிலைப் பற்றி நமக்கென்ன வந்தது? சங்கராச்சாரி வேலையல்லவா அது?" என்று தட்டிக் கழித்து விட்டார். ஆனால் **பெரியார் ஒருவர்** தான் அஞ்சா நெஞ்சுடன் தீர்மானத்தைக் கொண்டு வந்து அதை ஆதரித்துப் பேசினார்.

இன்னொன்று சொல்கிறேன். மலையாளத்தில் தீண்டாமையை ஒழிப்பதற்கு முதன் முதலில் முனைந்தவர் நாயக்கரே. பின்னால் திருவாங்கூரில் கோயில் திறப்பு நிகழ்ந்தபோது பலர் அதற்குக் காரணம் சர் சி. பி. என்றார்கள். காந்திமகாத்மா என்றார்கள். யார் யாரையோ சொன்னார்கள். ஆனால் உண்மையில் திருவாங்கூரில் தீண்டாமை ஒழிப்பிற்குக் கால்கோள் நிகழ்த்தியவர் நாயக்கரே என்று "நவசக்தி"யில் நான் அப்போதே எழுதினேன்.

அவரது வாழ்க்கையின் தலையாய பண்பு எதுவென்று கேட்டால் சீர்திருத்தம் சீர்திருத்தம் என்று அறைகூவிச் சொல்வேன். காங்கிரசைவிட்டு விலகிய பின்புதான் அவர் ஒரு சீர்திருத்தவாதியானார் என்று இளைஞர்கள் நினைக்கலாம். ஆனால் அது உண்மை அன்று. சீர்திருத்தம் இளமையிலிருந்தே அவரிடம் காணப்படும் ஒரு பிறவிக்கூறு.

அவரது கருத்துக்களில் முதன்மையானது பிறவியில் உயர்வு தாழ்வு கூடாதென்பது. இன்று உலகம் முழுவதும் சோஷலிசத்தைக் கடைப்பிடிக்கிறது. சோஷலிசத்தின் அடிப்படைக் கொள்கை பிறப்பிலே உயர்வு தாழ்வு கூடாது என்பது தான். இக் கொள்கையை

(8-ம் பக்கம் பார்க்க)

நமதென்று நாட்டடா நந்தமிழ்ப் பொன்னாடு
நரிகளுக் கிங்கில்லை வேலை!
சமைகின்ற கலையெலாம் தமிழ்தந்த பணியெலாம்
தலையென்று சாற்றடா உலகில்!
ஊதடா நற்றமிழ் ஒன்றென்று நாடெலாம்
ஊதடா ஊதடா தாரை!

—பாரதிதாசன்.

போர்வாள்

20—9—47 சனிக்கிழமை

அன்னையே வருக!

தாய்—சேய் இருவர்க்கும் இடையே உள்ள உறவு அற்புதமானது. பெற்ற தாய் தனை மகவு மறந்தாலும் தனயன் பாசத்தைத் தாய் விட மாட்டாள். சீற்றத்தால் அன்னை தன்னை வெறுத்தாலும் சேயது தாயிடம் சென்றே தீரும். சேய் முகம் காணாத் தாயும், தாய்முகம் காணாச் சேயும் மழைமுகம் காணாப் பயிரெனவே வாட்டமுறுவர். சிலநாள் பலநாள் பிள்ளைக்கும் தாய்க்கும் நடுவே மனத்தாங்கல் எழலாம். அம்மனத் தாங்கல் சில பல சமயம் பெரும் புயலாக வீசுதலும் உண்டு. புயல் வீசும் வேளை இருவரும் ஒருவரை ஒருவர் நேரில் காணவும் ஒப்பாது ஒட்டாரஞ் செய்யலாம். என் உயிரது போயினும் அப் பிள்ளையைப் பாரேன் என்று தாய் சூளுரை கூறலாம்; “அவளா என் அன்னை! அல்லவே! என்னைக் காட்டிக் கொடுத்த துரோகி அல்லவோ அவள்” என்று மகன் சுடுசொல் வீசலாம். வழக்கு மன்றம் வரையில் சென்று கூட இருவரும் மல்லுக்கு நிற்கலாம். ஆனால் கரையோரத்தில் குமுறியெழும் அலைகளுக்குப் பின்னால் கடலில் அமைதி அரசோச்சுதல்போல, அவர்கள் உள்ளத்தின் உள்ளே தாய்—சேய் பாசம் நின்று நிலவவே செய்யும். கோபமும் கொந்தளிப்பும் ஓங்கியெழும் வேளையிலும் இந்தப் பற்று—பந்தத்துவம்—நீங்கா அன்பு உள்ளத்தில் ஒரு மூலையிலேனும், அடங்கி அமைந்த நிலையிலேனும், ஒளி வீசியே தீரும். காலம் வரும்போது—என்றேனும் ஒரு நாள் இருவர் தம் வாழ்நாளுள் அக் “காலம்” வந்தே தீரும்—இருவரும் ஒருவரை ஒருவர் ஆரத்தழுவி, பிரிந்து நின்ற நாளை எண்ணி வருந்தி உள்ளம் நையவே செய்வர். இது இயற்கை விதி.

இந்த விதிக்கு விலக்கல்லர் திரு. வி. கலியாணசுந்தரனாரும் நாமும். அவர் நம் தாயனையார். நாம் அவர்தம் சேய் அனையோம். தமிழகத்திலேயே இதுவரை என்றும் எழும்பியிராத பெரும் புயலை எழுப்பி, எத்தனையோ பேர் புக அஞ்சிய வைதீகமெனும் இருப்புக் கோட்டைக்குள்ளே புகுந்து, அதைக் கலகலக்கச் செய்த சுயமரியாதை இயக்கம் இருக்கிறதே அதன் தாயெனவே தன்னை அழைத்துக்கொள்வர் திரு. வி. க. சில ஆண்டுகளுக்கு முன்னால் அவருடைய மணிவிழா நடைபெற்ற போதும், பல ஆண்டுகளுக்கு முன்பு அன்னை நாகம்மையார் படத்தை அவர் திறந்துவைத்த ஞான்றும் அவர் இவ்வண்ணமே குறிப்பிட்டுப் போ[ந்]தார். நாமும் அவரை எஞ்ஞான்றும் நம் மதிப்பிற்குரிய “அன்னை” எனவே எண்ணி அவ்வாறே அவர்பால் அன்பு செலுத்தி வந்துள்ளோம்.

தாய்க்கும் சேய்க்கும் இடையே “போர்” மூள்வது உண்டல்லவா சில சமயம். அதுபோல தமிழ்த் தலைவர் திரு. வி. க-வுக்கும் நமக்கும் இடையே எத்தனையோ முறை “போர்” மூண்டதுண்டு. 1926-30-ம் ஆண்டுகளில் போர் வாடை அதிகமாக வீசிற்று. பின்னே அது படிபபடியே அருகி அ

அழிந்து போயிற்று. அன்
ங்கும் அவள் குழந்தைக்கும்
நடையே நிகழும் போர் எத்
ா நாளுக்குத்தான் நீடிக்க
டியும்?

'என்ன இருந்தாலும் திரு.
க. சொல்வது தவறு தவறு
ன். அவர் பழமையில்
மை காணலும் புதுமையில்
மை காணலும் புது உலகப்
தையில் தமிழகத்தைச் செலு
ம் நம் முயற்சிக்கு ஊறு
டுமே தவிர உறுதுணை செய்
து" என்று நாம் பலமுறை
ரயறுத்துச் சொல்லியிருக்கி
ம். சமயப் பித்தர்கட்கும்
திச் சழக்கர்கட்கும் ஆக்கம்
ம் போக்குடையார் என்று
வர்மீது "குற்றப் பத்திரிகை"
சித்திருக்கிறோம். கிடைத்
கரிய மாணிக்கமே அவர்
ளுலும் ஆரிய வட்டாரத்திற்
லவோ அடிக்கடி துணை
ாகிறார் அந் நல்லறிஞர் என்று
ளம் வெதும்பி நாம் உரைத்
இருக்கிறோம். பழமையின்
டாளங்கட்கு அடிக்கடி
ர் தளபதியாகிறாரே, நம்
ர்வாளை அவர்மீதும் பாய
நேர்கிறதே இது என்ன
டுமை, ஏன் இந்தப் பாழ்
என்று நாம் பெருமூச்சு
புகன்றும் இருக்கிறோம்.
த்தமிழ் வாய், உழைப்பாளி
உழைக்குந் தோள், அன்
ளம், தமிழெழுத்தை வித்தி
யிர் விளைக்கும் விரல்,
ிழருக்கோர் தீமை
னில் விரைந்தோடும் கால்
த்தனை கொள்" கலியாண
தாஞர் ஒரு படைவரிசையில்
கவும் நாம் அதன் எதிர் வரி
யில் நிற்கவுமான சூழ்நிலை
பட்டபோதெல்லாம் "இது
டிது! இது கொடிது!"
று நம்மையே நாம் நொந்து
ண்டிருக்கிறோம்.
ம்மைப்போலவே அவரும்
மைத் தாக்க நேர்ந்தபோதெல்லாம் வருந்தியே இருப்பார். தனயனைத் தாய் எதிர்க்க நேர்ந்தால் உள்ளம் வேதனைப் படாமலா இருக்கும்?

எப்படியோ எந்தக் காரணத்தாலோ இது நாள்காறும் தாயும் சேயும் பிரிந்திருக்க நேர்ந்தது. நாமும் அவரும் வெவ்வேறு படை முகாம்களில் உலவ வேண்டி இருந்தது. இன்று நிலைமை மாறிவிட்டது. வடநாட்டுப் பாசிசத்தை வீழ்த்தும் பெரும் போரின் முன்னணியில் நிற்கத் திரு. வி. க. "தயார்" கூறுகிறார். நம்முடைய இலட்சியமும் அது தானே! ஆகவே நாம் இருவரும் எந்தெந்த வழியோ சென்று, எப்படி எப்படியெல்லாமோ அலைந்து, இன்று ஒரே இலட்சிய பூமியில் பயணம் செய்யத் தொடங்கி விட்டோம். உள்ளத்திற்கு உவகை தரும் சேதி அல்லவோ இது!

தாய்க்கும் சேய்க்கும் நடுவே நின்ற "பகைமை" இன்று மாய்ந்துவிட்டது. தாய் விரும்புவது சோஷலிசம்; தனயன் விழைவதும் எல்லார்க்கும் உடைமை எல்லார்க்கும் உரிமை என்றால் வேற்றுமைக்கு இடம் ஏது?

வடநாட்டுக் காங்கிரஸ் முதலாளித்வ வழி செல்கிறது. தென்னாடு வடநாட்டினின்றும் விடுபட்டு சோஷலிசக் குடியரசு காணல் வேண்டும் என்பது அன்னையின் கருத்து. திராவிட நாடு திராவிடர்க்கே என்பது மகனுடைய முழக்கம், இரண்டும் ஒன்றுதானே!

படேல் ஆணை என்றதும் தலை வணங்குகின்றனர் சட்டசபை உறுப்பினர்கள். என்னே அடிமைத்தனம் என்று உள்ளம் உருகக் கூறுகிறார் திரு. வி. க. நாம் சொல்வது மட்டும் வேறு?

ஒரு பத்துப் பன்னிரண்டு பேர் இன்று முப்பது கோடி மக்களையும் ஆள எண்ணுகின்றனர் இது நாசிசம் அல்லவோ என்று நம்மையே கேட்கிறார் கலியாணசுந்தரனார். நாசிசம் என்றுதான் பல ஆண்டுகளாய் நாம் சொல்லி வருகிறோமே!

நம்மிடையே எவ்வளவு கருத்து வேற்றுமைகள் இருந்த போதிலும் சரியே, தென்னாடு தென்னாடு தென்னாடு என்ற ஒரே அடிப்படையில் நாம் அனைவரும் ஒன்று திரண்டு நிற்க வேண்டும் என்று ஆய்வுரை வழங்குகிறார் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. திராவிடத் தந்தை தமிழர்க்குத் தந்த தாரக மந்திரமும் இதுவே அல்லவோ?

பல சொல்வானேன்! அவர் கருத்தும் நம் கருத்தும் ஒன்றே. அது டில்லி செங்கோல் திராவிடத்தை ஆளக்கூடாது என்பதே.

"இந்த எண்ணம் எனக்குப் பல நாட்களாக உண்டு. ஆனால் ஆகஸ்டு 15 எப்போது வரும் வரும் என்று காத்திருந்தேன். விடுதலையும் வந்துவிட்டது. இனி என் உடல் தளர்ச்சியையும் எண்ணாது வடவர் ஆதிக்கத்தை வீழ்த்திடும் பணிதனை ஆற்றவே போகிறேன்" என்று தமிழ்ச் சுவை சொட்டச் சொட்டத் திரு. வி. க. சென்ற கிழமை கடலூர் மாநாட்டில் கூறினார். இதை நாம் முழு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். சேய் தனிப்பட நின்று பத்தாண்டுகளாகப் போராடி வரும் ஒரு களத்திற்குத் தாய் அதன் துணையாக வருவதாயின் அது எவ்வளவு மகிழ்ச்சிக்குரிய சம்பவம்! அது கண்டு அச் சேய் முகம் எவ்வளவு மலரும்!

கடலூர் மாநாட்டில் அவர் ஆற்றிய வீர உரையைக் கேட்டோம். களிப்புற்றோம். அன்னையே வாழ்க வாழ்கஎன வாழ்த்துக் கூறினோம்.

தொண்டிலே விருப்புடைய தொண்டர் அவர்

இருபது ஆண்டுகள் ஒதுங்கி நின்றவர்—போராட்ட முன்னணியை விட்டு விலகிச் சென்றவர் இன்று மீண்டும் வருகிறார். நடமாடும் தமிழகம் எனத்தகும் பெற்றியினர் தனித் திராவிடம் காண வருகிறார். பெரியாரின் பெரு நண்பர் திரு. வி. க. தென்னாட்டைச் சிறை மீட்க வருகிறார். தமிழ்த் தென்றல் நமக்கு வாழ்வளிக்க வருகிறது.

வாழ்க அத் தென்றல்!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மறுக்கும் சமுதாயம் சிறைநீர் (Stagnant water) போல் அழிந்துவிடும். நாயக்கரும் இதையே சொல்கிறார். இதை மறுத்து இப்போதும் உயர்வு தாழ்வு வேண்டுமென்று உரைப்பவர்கள் சுடுகாட்டிற்குப்போக வேண்டியதே. இதை ஆரிய சமாஜிகள் பிரம்ம சமாஜிகள் எல்லாரும் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் படிப்பாளிகளிடத்தில் சொல்வதோடு நின்றுவிடுவார். ஆனால் நாயக்கரோ எல்லோரிடமும் சொல்கிறார்.

சாதி, பிறப்பில் உயர்வு தாழ்வு முதலியன அடியோடு தொலைய வேண்டுமானால் அதற்குரிய ஒரே ஒரு கருவி கலப்புமணம் என்பதுநாயக்கர் கருத்து. இதில் யாம் இருவரும் ஒன்றித்த கருத்துடையோம்.

அவர் ஒரு சிறந்த தொண்டர். நான் முதன் முதலில் அவரைக் கண்டபோது அப்போது அவர் கோயமுத்தூர் ஜில்லா போர்டு உறுப்பினர். ஈரோடு நகரசபைத் தலைவர். இதுவரை அதே துறையில் இருந்திருந்தால் அவர் ஒரு பெரிய மந்திரியாய் வந்திருப்பார். ஆனால் அவர்க்குப் பதவியில்விருப்புகிடையவே கிடையாது தொண்டிலேயே விருப்புடைய தொண்டர் அவர். அவர் வயதிலே என்னை விடப் பெரியவர். நான்கு ஆண்டுகள் பெரியவர். ஆனால் என்னிடம் தளர்ச்சி காணப்படுகிறது அவரோ தொண்டில் இன்னும் சளைக்கவில்லை. ஒரு தொண்டர் இன்று தமிழகத்தில் இருக்கிறார் என்றால் அது இராமசாமிப் பெரியார்தான்.

அவர் பேச்சைப் பற்றியோ சொல்ல வேண்டுவதில்லை. பேசத் தொடங்குகையில் முதலில் மெதுவாகத்தான் பேசுவார். பிறகு அவர் பேச்சு புயலாகும்; பெரும் புயலாகும்; புயல் மூன்று மணி நேரம் நான்கு மணி நேரம் வீசும்.

இராமசாமியாரைப் பற்றி எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் காலத்தின் அருமை கருதி இவ்வளவில் நிறுத்திக்கொண்டு திராவிட நாட்டுப் பிரிவினை பற்றிச் சில சொல்ல விழைகிறேன்.

இன்றைத்தினம் இராமசாமி நாயக்கர் தென்னாட்டை வட நாட்டினின்றும் பிரித்தே தீர வேண்டும் என்று உறுதியாக இருக்கின்றார். இந்த எண்ணம் எனக்குப் பல நாளாய் உண்டு. ஆனால் ஆகஸ்டு 15 எப்போது வரும் என்று நான் காத்திருந்தேன். வந்தவுடனே தென்னாடு வட நாட்டுப் பாசிசத்திலிருந்து விடுபட வேண்டுமென அறிக்கை விட்டேன். பக்கிங்காம் மில் போராட்ட காலத்தில் என்னை அரசாங்கத்தார் வீட்டுக் காப்பில் வைத்தபோதே என்னைச் சிறையிட்டது ஒமந்தூர் ஆட்சியல்ல—வட நாட்டுப் பாசிசம் என்று எழுதினேன்.

பிரகாசம் முதலமைச்சராய்
இருந்த போது பாதுகாப்
கொடுஞ் சட்டம் ஒன்று
ரால்நிறுவப்பட்டது. அது க
தென்று காங்கிரஸ் சட்ட ச
உறுப்பினர் சிலர் சண்டை
டனர். ஆனால் பிரகாசம், ப
காப்புச் சட்டம் அவசி
என்று படேல் துரை எழு
கடிதத்தைக் காட்டியதும் அ
கிவிட்டனர். அந்தச் சட்
என்னையும் தீண்டியது—செ
சம் தீண்டியது! திராவி
பெரு மக்களே சொல்கிறே
அந்தச் சட்டம் இன்னும் இ
கிறது. அது உங்கள் இயக்
தின்மேல் பாய்ந்தாலும் ப
லாம். அதை எதிர்த்து ஒ
கத் தயாராயிருங்கள்; தய
யிருங்கள். காங்கிரசை வள
பதற்காகவே உயிரை வி
என்மீதே பாய்ந்தது எ
சொன்னால் எவ்வளவு கொடு
டானது அச் சட்டம் எ
தைச் சொல்ல வேண்டுவதில்

கொடிய சட்டங்களை ஒ
கவே காங்கிரஸ் தோன்றி
அந்தக் காங்கிரசில் இந்தச்
டம் தோன்றி விரிந்து வள
தென்றால் இது பாசிசமா
'சயா சோஷலிசமா என்று
கிறேன். இதற் கெல்லாம்
வர் யார் தெரியுமா? ப
படேல் படேல் என்று அ
கூவிச் சொல்கிறேன். முப்
கோடி மக்களை ஒரு ஆள் ஆ
வைக்கிறார். ஹிட்லரிசம் ம
விட்டது; படேலிசம் ஆள்கி

ஆகஸ்டு 15 க்கு முன்
கிரஸ் இருக்க வேண்டும் வே
டாம் என்று பலர் பலவாறு
வந்தனர். இப்போது
இருக்க வேண்டும் என்கி
னர். என்னைப் பொறுத்த
யில் காங்கிரஸ்மீது எனக்
கெட்ட எண்ணமே கிடைய

அடக்குமுறை வருகிறது தயாராய் இருங்கள்

ல் காங்கிரசின் கொள்கை
து 1925-30 முதல கொஞ்
கொஞ்சமாக மாறிப்போய்
போது பாசிசத்தில வந்து
திருக்கிறது. இதைத் தான்
கண்டிக்கிறேன்.
ங்கிரசைத் தூற்றும் எண்
எனக்குக்கிடையாது. இனி
சோஷலிசத்தை வளர்ப்
எங்கள் கடமை என்று
ரஸ் முன் வந்து சொல்
மே பார்ப்போம்! சொல்
சொல்ல முடியாது.
னில் காங்கிரஸ் இன்றைய
ஒரு பத்துப் பனனி
பேர் வசம் சிக்கிக் கிடக்
. இன்றைய தினம் காங்
ச விட்டு அவர்கள் போய்
ால் வட நாட்டில் இன்று
ம் கொலை கொள்ளை எல்
ன்றவிடும். ஆனால் அவர்
வார்களா? போக விடு
ளா, டாடாவும் பிர்லாவும்
ங்காவும் இவர்களுக் கெல்
குரு மூர்த்தியாய் விளங்கும்
லும்?
டல் எண்ணம் உலகத்
ஆள வேண்டுமென்ற
எண்ணம். இந்தியாவைக்
த்திகள் ஒருவர்தான் ஆள
டும் மற்றவர்கள் எல்லாம்
ாய்க்க வேண்டும் என்பது
கருத்து. இந்த ஹிட்ல
தை ஒழிக்க வேண்டியது
வாரு சோஷியலிஸ்டின்
ம; ஒவ்வொரு கம்யூனிஸ்
டமை; ஒவ்வொரு தேசிய
யின் கடமை; எல்லாக்
ளுடைய கடமை. தென்
ல் எந்தெந்தக் கட்சி வட
ப் பாசிசத்தை அழிக்
அவற்றுட னெல்லாம்
சேர்ந்து உடல் தளர்ச்சி
உன்னுது தொண்டு
நான் அஞ்சேன்.
லிசத்தை வளர்க்கும் கட்சிகள் எல்லாவற்றிற்கும், என் தொண்டு அரண் செய்யும். நான் சோஷலிஸ்ட். நாயக்கர் சோஷலிச விரோதியா? இல்லை. அவருடைய பிறவி பேச்சு எழுத்து எல்லாம் சோஷலிசம். ஆகவே எங்களுக்குள் இத்துறையில் வேற்றுமை இல்லை.

இனி பெரிய போராட்டம் எழப்போகிறது. நமக்குள்ளேயா? இல்லை. வட நாட்டுப் பாசிசத்தோடு. தென்னாட்டினர் அனைவரும்—தமிழ்க் குருதி தம் உடலில் ஓடப் பெற்றார் அனைவரும் இப் பாசிசத்தை வீழ்த்துதற்கு முனைதல் வேண்டும்.

நம் மக்கள்—நம்மிடம் ஓட்டு வாங்கி உறுப்பினராகி சட்ட சபை நுழைந்தவர்கள் படேலுக்கு ஏன் இப்படி அஞ்சுதல் வேண்டும்? படேல் ஒரு கட்டளை இட்டால் அப்படியே பெட்டிப் பாம்பாக அடங்கிவிடுகிறார்களே, ஏன் இந்த அடிமைத்தனம்? படேல் தமிழ் மொழி அழியட்டும் என்று சொன்னாலும் சொல்வார். அப்போது கூட இவர்கள் ஆ ஆ என்று தலையசைப்பார் போலும். வெட்கம்! வெட்கம்!

தமிழ்ப் பெருமக்களே, குறள் நம்முடைய வேதம்; உயிர்மறை. அத்தகைய குறளில் அறத்துப் பால் பொருட்பால் மட்டுமே பொருந்தும்; காமத்துப்பால் பொருந்தாது என்று நம்முடைய கல்வி அமைச்சர் கூறுகிறார். நான் கூறுகிறேன், காமத்துப் பால் இல்லையேல் அறத்துப் பாலும் பொருட்பாலும் பயன் படா. அகப் பொருள் இலக்கணம் தமிழர்க்கு உயிர். ஆகவே காமத்துப் பாலை இழப்பதினும் இதோ உள்ள கடலில் வீழ்ந்து நம் உயிரை இழப்பது மேல்.

அவிநாசிலிங்கம் நல்ல தமிழர், தமிழ்க் குடும்பத்திற் பிறந்தவர்; தமிழ்க் கலை பயில்பவர்; கலையகராதி தொகுப்பவர்; இப்படிப்பட்டவர் காமத்துப் பாலைப் படித்தால் தமிழர் கெடுவர் என எண்ணுகிறாரே, என்ன வியப்பு!

ஏன் காமத்துப் பால் கூடாது என்றால் மோட்சம் வராது என்கிறார். பெண்களைவிட்டுக் காட்டிற்கு ஓடவேண்டும் என்பது இவர் கருத்துப்போலும். இதைச் சொல்கிற இப்பெரியார் தாய் வயிற்றிலிருந்து வந்தாரா தந்தை வயிற்றிலிருந்து வந்தாரா என்று கேட்கிறேன்.

காதல்தான் தமிழருடைய உயிர். பரிபாடலைப் பார்த்தால் தெரியும். பெண்ணை வெறுத்தல் வடநாட்டு அறம். மனத்துக் கண் மாசில னாதல் தமிழ்நாட்டு அறம். அறம் பொருள் இன்பம் இம் மூன்றுதான் உண்டு தமிழனுக்கு. இன்னொன்று—"வீடு"—தமிழனுக்குக் கிடையாது. நல்ல வாழ்க்கை, இன்ப வாழ்க்கை—இது தான் அறம் தமிழன் கருத்துப்படி. இது என் கொள்கை—என் நண்பர் இராமசாமியார் கொள்கை.

தமிழர்களே, திராவிடர்களே, அன்பர்களே, (எந்தச் சொல்லேனும் வழங்குங்கள்—அது பற்றிய கவலை எனக்கில்லை) தமிழுக்குப் பல்வேறு கேடுகள் வந்துள்ளன. அவற்றில் ஒன்று அகப் பொருள்மீது எய்யப்படும் பாணம். தமிழை இத்தகைய ஆபத்துகளினின்றும் காத்து ஓம்புதல் உங்கள் கடன்.

வடநாடு படிப்படியாக நம் பொருளையும் கல்வி, வாழ்வையும் கல்வி, இன்று அகத்துறையிலும் கை வைக்கிறது. ஆகவே தென்னாடு வடநாட்டினின்றும் பிரியவேண்டும் பிரிய வேண்டும் பிரியவேண்

காங்கிரஸ் தென்னாட்டின் கழுத்தறுத்தால்!

டும் என்று மும்முறை சொல்கிறேன். தென்னாடு பிரிந்து சோஷலிச வழி சென்று வடநாட்டையும் சோஷலிசத்திற்கு ஈர்க்க வேண்டும்.

காங்கிரசின் பேரால் படேல் கொக்கரிக்கிறார். கத்திக்குக் கத்தி—வெட்டுக்கு வெட்டு என்கிறார். அடாடா! அதிகாரத்தில் உள்ளவர் அதிலும் காந்தியாரின் முதல் மாணவர் — அவரா இப்படிச் சொல்வது! படேலின் தொடைமீது நான் தலை சாய்த்துப் படுத்திருக்கையில் நான் இறந்து போனால் என் உயிர் வைகுண்டம் போகும் என்று காந்தி கூறியுள்ளார். அந்தப் படேல்தான் வாளுக்கு வாள் என்று இன்று பேசுகிறார். காங்கிரஸ் பாசிசத் தலைவர்களை உதறித் தள்ளிவிட்டு சோஷலிசத்தைத் தழுவினால் அந்தக் காங்கிரசை எல்லோரும் தழுவலாம். காங்கிரஸ்மீது எனக்குக் காழ்ப்பில்லை.

இந்தியா முழுதும் சோஷலிசம் பரவுமானால் வடநாட்டிலிருந்து தென்னாடு பிரிய வேண்டிய அவசியமென்னவென்று கம்யூனிஸ்டுகள் கேட்கிறார்கள். இந்தியா முழுதும் சோஷலிசமாக ஆய்விடினும்கூட அந்தக் காலத்திலும்கூட நேஷனலிடி என்று ஒன்றுண்டு என்று அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

வடநாட்டினின்றும் தென்னாட்டைப் பிரிப்பது வடநாடு மீதுள்ள வெறுப்பால் அல்ல. வடநாட்டு மக்கள் மீதுள்ள வெறுப்பாலுமல்ல. சுரண்டல் கூடாது என்பதால்தான். இன்று தமிழ் நாட்டில் சௌகார் பேட்டை என்றொரு பகுதி இருக்கிறது. அத்தகைய பகுதிகள் கூடாது என்பதற்காகத்தான்.

என்னுடைய கெழுதகை நண்பர் இராமசாமிப்பெரியார் தம்முடைய இயக்கத்தைப் படிப்படியே வளர்த்து தென்னாட்டு இயக்கமாக இன்று நிறுத்தி இருக்கிறார். இதில் கட்சி இல்லை; கருத்து வேறுபாட்டிற்கு இடம் இல்லை, இதை அனைவரும் போற்றுதல் வேண்டும்.

இப்பொழுது என் செய்தல் வேண்டும்? தென்னாடு தென்னாடு என்ற ஒரே அடிப்படையில் கருத்து வேற்றுமையின்றிப் பணியாற்றல் வேண்டும்.

என்ன ஐயா, அது காங்கிரசுக்கு மாறுபட்ட தாச்சே என்பர் சிலர். ஆமாம் மாறுபட்டது தான். ஆனால் என் செய்வது? காங்கிரஸ் தென்னாட்டின் கழுத்தறுத்தால்—?

இப்போது உங்கள் கூட்டம் சுருங்கி இருக்கிறது. ஆனால் பெரியார் தலைமையில் ஒன்றுகூடி நின்று, வட நாட்டுப் பாசிசத்தை ஒழித்து, சோஷலிசத் தென்னாட்டை நீங்கள் அமைத்து விட்டால் பின்பு அனைவரும் உங்களிடம் வருவர். சர் சண்முகம் உங்கள் நிதி அமைச்சர் ஆய்விடுவார். டாக்டர் சுப்பராயன் தென்னாட்டின் முதலமைச்சராய் விடுவார். இன்று படேல் தலைமையின்கீழ் இருந்தால்தான் பதவி கிடைக்குமென்று நம்புவோர் எல்லாம் அன்று என்னங்க என்னங்க என்று கேட்ட வண்ணம் நாயக்கரிடம் வந்து விடுவர்.

இப் பெருங் கூட்டத்தில் திரண்டு நிறைந்து மிடைந்து

செறிந்து துதைந்து
கும் திராவிடப் பெரு
களே, தென்னாடு பிரிந்தே
வேண்டும் இல்லையேல் கொள்
போய்விடும் என்று இராம
மிப் பெரியார் கூறுகிறார். உ
ளிடையே உள்ள சிறு
கருத்து வேற்றுமைகளை வி
விடுங்கள். உங்கள் அ
எண்ணமும் ஒன்று தா
ஆகவே ஒன்றுபடுங்கள். ம
கள் பலவாக இருக்கல
அவற்றின் நிறத்தில் வேறுப
இருக்கலாம்; ஆனால் அவற்
ஊடுருவிச் செல்லும் க
ஒன்றுதான்.

சில பேர் எல்லாம் சரி நா
கர் மட்டும் வேண்டாம் என்
அவர் தலைமை வேண்ட
என்றால் அவர்க் கென்ன
டம். ஈரோட்டில் உட்கார்
விடுகிறார். நமக்குத்தான்
டம்.

எனவே தென்னாட்
பிறந்து, தென்னாட்டில்வளர்
தென்னாட்டின் பழக்க வழக்
களை ஏற்றுக் கொண்ட எல்
ரும் வந்து கூடுங்கள்; தென்
வட நாட்டிலிருந்து பிரிவத
ஆக்கம் தேடுங்கள். இதற்
உயிர்க்கிறுதி நேரினும் இ
விடாது உழைப்போம் என்
உறுதி கூறுங்கள்.

என்னுடைய உரையை இ
அளவில் நிறுத்திக் கொ
தன் உடல் பொருள் ஆவி
றையும் தான் பிறந்த நாட்
நலத்திற்கே அர்ப்பணம் செ
வட நாட்டுப் பாசிசத்
தொலைப்பதற்காக ஓ
உழைத்து வரும் இராமசா
பெரியாரின் படத்தைத் தி
வைக்கிறேன்.

புரட்சி ஓங்குக! தமிழ் வெ

பெரியார் வாழ்க!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)
ும்? இனியும் இதைத்
தொடர்ந்து செய்வார்களே
னால், ஏசுநாதர் எப்படி
னிதர்களின் பாவத்தைப்
போக்குவதற்காகத் தன்
இரத்தத்தைச் சிந்தினரோ,
அதேபோல், திராவிடர்க
ளாகிய நாம் திராவிடஸ்
தான் பெறும் பொருட்டு
மது இரத்தத்தைச் சிந்த
வேண்டி வந்தாலும் வரும்.
அதற்கும் அஞ்சாமல் நாம்
லைநிமிர்ந்து நிற்போம்
ன்பதை விளக்குவதே
இக் கறுப்பிடைச் சிகப்பு"

று குறிப்பிட்டு விட்டு,
ராவிடஸ்தான் நமக்கு இன்ப
ாக விளங்கும் என்பதில்
தகமில்லை. இந்த இன்பத்தை
டைவதற்கு என்ன துன்பம்
தாலும் ஏற்றுக்கொள்வோம்
று முழங்குங்கள். வீரத்
ன் உழைக்க முன் வாருங்
மனமகிழ்ச்சியுடன் பணி
றுங்கள். எங்கெங்கும் இத்
விடர் கொடியை உயர்த்துங்
இந்தக் கொடியினில், கறுப்
டயே சிகப்பு எழும்பியுள்ள
கொப்ப நீங்கள் திராவிடர்
இழிவு நீக்கிப் புரட்சிப்புயலை
ப்புங்கள்" என்று அம்மை
விளக்கவுரை ஆற்றியபோது
ப்புவோம் எழுப்புவோம்
அனைவரும் ஆர்ப்பரிப்புச்
தனர். அந்த ஆரவாரத்தி
டயே கழகக் கொடி மடமட
மேலுயர்ந்துசென்று
டிமர உச்சியில் செம்மாந்து
றது.

"திராவிடநாட்டுப்
ரிவினைக் கிளர்ச்சியை முர
டுப் பிடிவாதத்தால்
டக்கி விடலாமென்று
னைப்பதோ, பஞ்சாப் கல்
த்தா கலவரங்களைக் காட்
பயமுறுத்துவதோ
ருந் தவறாகும். ஒரு
னத்தின் உரிமைக் கனலை
இதுபோன்ற பயமுறுத்தல்
கள் மேலும் மேலும் உக்
கிரத்தோடு எழும்பச் செய்
யுமே தவிர ஒரு சிறிதும்
தணித்துவிடாது. எனவே
தான் வீணாக முரட்டுப்
பிடிவாதத்தால் அமைதி
நிறைந்துள்ள திராவிடநாட்
டிலே ஆபத்தைக் கொணரா
தீர்கள். உண்மை நிலை
உணர்ந்து பிரிவினைக்கு
ஆக்கம் தாருங்கள்"

என்று பிரிவினையை எதிர்க்
கும் தோழர்களுக்கு வரவேற்புக்
கழகத் தலைவர் **தோழர். சண்முக
சுந்தரனுர்** அடுத்து விளக்கவுரை
தந்தார்.

"வெள்ளை ஏகாதிபத்தியம்
ஒழிந்த இடத்தில் வட நாட்டு
ஏகாதிபத்தியம் ஏற்பட விடு
வதா? ஆங்கிலேயரை மிரட்டி
அரசுரிமை பெற்று அதை அக்
கிரகாரக் கும்பலுக்குத் தானம்
தந்துவிடுவதா? நமக்குரிய நன்
னாட்டில் வடவர் துணைகொண்டு
ஆரிய அரசு அமைவதா? அது
கண்டும் நாம் வாளாயிருப்பதா?
சொந்த நாட்டில் வாழ வழி
யின்றி நம்மவர்கள் வேற்று நாட்
டில் வதைபடுவதா? நாம் இன்ன
மும் அடிமைக்கு அடிமைக
ளாய், தற்குறிகளாய், சூத்திர
ராய், பறையர் பள்ளர் தாசர்க
ளாய், பாட்டாளிகளாய், கூலிக
ளாய் இருக்க வேண்டுவதுதானா?
இதற்கெல்லாம் விமோசனம்
இல்லையா" என்று கேள்விகளை
வரவேற்புத் தலைவர் அடுக்கடுக்
காக எழுப்பிக்கொண்டே வந்து
விமோசனம் அடைய வழி ஒன்
றிருக்கிறது - அதுவே திராவிடத்
தனிநாடு காண்பது என்று முடி
வுரை கூறி நிறுத்திய போது,
விமோசனம்அடைவதற்குவேறு
வழி உண்டு என்று யார்தான்
சொல்லியிருக்க முடியும்? எப்
படித்தான் சொல்லமுடியும்?

டாக்டர் கிருஷ்ணசாமி தன் திற
ப்புவிழாச் சொற்பொழிவில் பல
மான மத்திய சர்க்கார் அமைக்
கப்பட்டு மாகாணங்களின் உரி
மை பறிக்கப்படும் மோசடியை
விளக்கிய பிறகு, தோழர்கள்
டி. சண்முகம், நடராசப் பிள்ளை,
பாரிஸ்டர் சுப்பிரமணியம், பீட்
டர், 'சமரசம்' ஆசிரியர் சுல்தான்
பாக்காதி, குடந்தை நீலமேகம்
சேலம் இரத்தினசாமி, சி. டி. டி.
அரசு,சமதர்மம் என்னும் தெலு
ங்கு இதழின் ஆசிரியரும் முன்
னேற்றக் கட்சியினருமாகிய
தோழர் கண்ணன் (இவர் தெலு
ங்கில் பேசினர்) முதலியோர்
முன் மொழியத் **தோழர் என்.
முத்தையா** தலைமை பூண்டு, அர
சியல் அமைப்பு மன்றம் திரா
விடர்க்கு இழைத்துவரும் கேடு
களைப் படிப்படியே எடுத்துக்
கூறினர்.

பிறகு, பெரியார் எழுந்தார்.
உணர்ச்சி நிறைந்த சொற்களை
வீசினர். பேச்சு மிக உருக்க
மாக அமைந்திருந்தது. நல்ல
பசி வேளையில் பகல் 12½ மணிக்
குப் பெரியார் பேசத் துவங்கி
னர். 2 மணிக்குத்தான் முடித்
தார். என்றாலும் மக்கள் இடம்
பெயர்ந்தனரில்லை, அதிலென்ன
வியப்பு? செவிக்கு உணவில்லாத
போதுதானே சிறிது வயிற்றுக்கு
ஈயப்படும்?

பெரியார், அவருக்கென்றே
இயல்பாக அமைந்த அந்த
"கொச்சை வார்த்தை உச்சரிப்
பில்" அழகாக—அருமையாக—
அடுக்கடுக்காகத் தன் உள்ளக்
கருத்துக்களை எடுத்துச் சொன்
னர். வழக்கம்போல் அவர்
பேச்சு மக்கள் சிந்தனையைத்
தட்டி எழுப்பிற்று. **"நாம்
முயற்சி செய்வோம். நம் முயற்சி
யில் தோல்விக்கே இடமில்லை. அப்
படி மீறி தோல்வி வந்தாலும் அது
அடுத்த வெற்றிக்கு நூறு பங்கு
தூரம் நம்மைக் கொண்டுபோய்
விடும்."** என்றும் "திராவிடர்
கழகம் இன்று தங்கக் கரண்டி
யாய் இருக்கிறது. (மதிப்பு மிக்க

தாய் இருக்கிறது) ஆனால் நமக்குள் எக்காரணத்தை முன்னிட்டேனும் ஒற்றுமைக் குறைவு நேருமாயின் அது அலுமினியக் கரண்டியாய்ப் போய்விடும் (மதிப்புக் குறைந்து போய்விடும்) இதை ஞாபகத்தில் வையுங்கள்'' என்றும் ''நான் போராட்டம் துவக்கவில்லையே என்று பலர் குறை சொல்கிறார்கள். போராட்டம் துவக்கத்தான் வேண்டும். துவக்கவே போகிறேன். ஆனால் துவக்கும் முன்பு அதற்கு நாம் தயாராக வேண்டும்'' என்றும் பெரியார் தன் பேச்சிடையே குறிப்பிட்டார்.

இடைவேளை உணவுக்குப் பிறகு மாநாடு மீண்டும் கூடியதும் திராவிட நாடு படத்திறப்பு சர் செல்வம் படத்திறப்பு முதலியன நிகழ்ந்தன. தோழர் கே. வி. அழகிரிசாமி, இந்திப் போரில் உயிர் நீத்த தமிழ்க் காளைகள் தாளமுத்து நடராசன் இருவரையும் அவருடைய அனல் கக்கும் ஆவேச நடையில் படப்பிடிப்புச் செய்தார்.

அழகிரியின் பேச்சுக்கு முன் தமிழ்க் கொண்டல் திரு. வி. கலியாணசுந்தரனார் போர் முரசு கொட்டினார். ஆம்! அவருடைய உடல் நலிவுற்றாலும் உள்ளம் நலிவுறவில்லை என்பதை அழகுற விளக்கிவிட்டார். அவருடைய செழுமை நண்பர் (இவை திரு. வி. க-வின் சொற்கள் தாம்) இராமசாமிப் பெரியாரின் படந் திறந்து வைக்கவே அங்கு வந்தார். ஆனால் வந்த இடத்தில் தன் உள்ளத்தையே திறந்து காட்டினார் திராவிடர்க்கு. பெரியாரின் சிறப்பியல்புகளை விளக்கினார்—அது நாம் எதிர்பார்த்தது தான்—அவர் அஞ்சாத நெஞ்சுடைய அடலேறு என்பதைத் தம் தேன்மொழித் தமிழில் இளந்து கூறினார்—அதுவும் நாம் எதிர்பார்த்ததே—ஆனால் வடநாடு வல்லரசை வீழ்த்துவோம் என்று அவர் இட்ட இடிமுழக்கம் இருக்கிறதே அது இவ்வளவு வலிமை நிறைந்ததாய் இருக்கும் என்பதை, ஒளிவு மறைவின்றிச் சொல்கிறோம், நாம் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. ''என் தோழர் இராமசாமியார் தம் இயக்கத்தை எப்படி எப்படியோ நடத்திச் சென்று கடைசியாக திராவிட நாட்டுப் பிரிவினை என்ற உயர்ந்த குறிக்கோளில் நிறுத்தியிருக்கிறார். முதலாளித்துவ வலையிற் சிக்கிக்கொண்ட வடநாட்டினின்றும் தென்னாட்டை விடுவித்து சோஷலிசக் குடியரசு அமைத்துத் தென்னாட்டை ஓம்புதல் என்ற இந்த குறிக்கோளை யாரும் மறுக்க முடியாது. தமிழர்களே, தோழர்களே, திராவிடப் பெருமக்களே, எழுங்கள்! எழுங்கள்! பாசிசம் பரவுவதை உடனே தடுத்து நிறுத்த முன் வாருங்கள்'' என்று திரு. வி. க. விரிவுரை ஆற்றியபோது மாநாட்டினர் அனைவர் உள்ளமும் களிப்புக் கடலாடிற்று.

திரு. வி. க. வின் சொற்களில் அழகும் தமிழும் கலையும் வீரமும் தெளிவும் திட்பமும் ''செறிந்து மிடைந்து ததைந்து'' நின்ற வேளையில் இடை இடையே மழை பொழிந்தது, என்றாலும் மக்கள் அவர் சொன்னமையை கேட்கத் தவறினாரில்லை. முதிர்ந்த வயது எனவே அமர்ந்த வண்ணம்தான் பேசினார்; உடல் கட்டுத் தளர்ந்திருக்கிறது—ஆகவே அடக்கமான குரலில்தான் பேசினார்; ஆனாலும் அந்தப் பேச்சு எவ்வளவு ஆணித்தரமானதாய் இருந்தது!

திரு. வி. க. முதலியாராகவும் பெரியார் நாயக்கராகவும் இருந்த காலத்தில் பிரிந்தனர். முதலியார் திரு. வி. க. வாகவும் நாயக்கர் பெரியாராகவும் மாறிய இன்று ஒன்று கூடுகின்றனர். இச் சந்திப்பு தமிழகத்திற்கு ஆ கம் தருவதாகும் என்பது கண் ணுடையார் எவரும் காண கூடியதே.

பேச்சை முடித்துக் கொள் 'பெரியார் வாழ்க'', ''த வெல்க'', ''புரட்சி ஓங்கு என்ற மூன்று சுலோகங்க எழுப்பினர் திரு. வி. க. பி தொடர்ந்து கூறுங்கள் என் மக்களை. முழங்கிற்று மா குரல் ஒலி போதாது இது தூருக்குக் கூட கேட்காது; கள் எழுப்பும் ஒலி வங்காள லிருக்கும் ஆச்சாரியாருக் டில்லியிலிருக்கும் படேலுக் கேட்கவேண்டுமே, உரத்து கூறுங்கள் என்றார் அறிஞர். தல் அதிர, பந்தல் உள்ள நி அதிர, மீதுள்ள வான் அ சு முழுந்தது இடி முழக்கம்—அ மாநாட்டில் திரண்டிருந்த விடர் குரல்.

பிறகு திராவிட நாட்டுப் வினையை வற்புறுத்தியும் வினையை நிலை நாட்டுதற் எல்லா முயற்சிகளையும் விடர்கள் மேற்கொள்ள டும் என்பதை வலியுறுத்தி பல தீர்மானங்கள் நிறை றப் பட்டன.

தலைவர் முடிவுரை, கூறல், வாழ்த்தொலிகளு மாநாடு இரவு 9 மணிக்கு ற்றது.

அன்று இரவும் அ நாளும் மாநாட்டுக்கு வந்தி பல்லாயிரவரும் தங்கள் தங் ஊர்களுக்குச் சென்ற கா போர் தொடுப்பதற்கான ம லோசனை மாநாட்டிற் சென்றுவிட்டு படைத் த உரை கேட்டுவிட்டு உள்ளத் வீர உணர்ச்சி ததும்பத் பப் படைவீரர் கூட்டம் த நிலையம் நோக்கித் திரும்பி போன்றிருந்தது.

வெல்க தமிழகம்!

வெல்க திராவிட

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliya
at Free Printers, 147, Coral Marchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (H